DINAMALAR
National Tamil Daily
உலக தமிழர் செய்திகள்

# தமிழக இஸ்லாமிய பிரமுகருக்கு சிங்கப்பூரில் பாராட்டு

அக்டோபர் 08,2015 IST

வேலூர் தொகுதி , முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் , ஜமால் முகமது கல்லூரியின் பிரபல முன்னாள் மாணவருமான அப்துல் ரஹ்மானுக்கு , சிங்கப்பூரில் உள்ள ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம் வரவேற்பு உபசார விழாவை மிகச் சிறப்பாக நடத்தியது .

சிங்கப்பூரில் , ஜமால் முகமது கல்லூரி பழைய மாணவர் சங்கம் அமைய வழிகாட்டியாக இருந்தவர் அப்துல் ரஹ்மான் என , சங்கத் தலைவர் ஆடிட்டர் முஹியத்தின் அப்துல் காதர் தமது வரவேற்புரையில் புகழாரம் சூட்டினார் . அப்துல் ரஹ்மான் தமது ஏற்புரையில் , சமுதாய வளர்ச்சிக்கும் , ஒன்றுபட்ட சமூகமாகத் திகழ்வதற்கும் நமது வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும் என்று குறிப்பிட்டார் .



தமிழக இஸ்லாமிய பிரமுகருக்கு சிங்கப்பூரில் பாராட்டு

நிகழ்வில் , ஆடுதுறை அஸ்ஸலாம் பொறியியல் கல்லூரித் தாளாளர் ஷாஜஹான் , மாநிலத் துணைச் செயலாளரும் , அய்யம்பேட்டை ஜம் ஜம் நிர்வாக இயக்குனருமான மில்லத் இஸ்மாயில் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர் .

சங்கத் துணைத் தலைவர் கலந்தர் மொஹிதீன் , பொருளாளர் ஹபீபுல்லா , துணைச் செயலாளர் ஹாஜா செய்க் அல்லாவுதீன் , கணிதப் பேராசிரியர் அமானுல்லா , தேசியப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் தமீம் தீன் , அப்துல் மாலிக் , நாகூர் சங்கச் செயலாளர் முகமது கவுஸ் , முகமது ஹசன் , ஆரிப் முதலியோர் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர் .

நமது செய்தியாளர் வெ.புருஷோத்தமன்